நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42 ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No. 456/2022

<u>அ.த.சா: 3 (LW–3) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காவா பீர் | சாதி | : | |
| தந்தை பெயர் | : | முத்தலீப் | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

07–08–2024 நாளன்று 1969 ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது
––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

நான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ேஹாட்டலில் சர்வராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 யை தெரியும். ஆஜர் எதிரி குமரேசன் என்பவரை தெரியும். கடந்த 22.12.2020 அன்று எங்கள் ஊரை சேர்ந்தவர் இறந்துவிட்டார். அவரை அடக்கம் செய்வதற்காக மறுநாள் எங்கள் ஜமாத்திற்கு சொந்தமான அடக்கஸ்தலம் உள்ள பைபாஸ் ரோடு மஞ்சகாவி மில் எதிர்புறம் உள்ள அடக்கஸ்தளத்தில் நாங்கள் அடக்கம் செய்வதற்கான வேலைகள் செய்துகொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி குமரேசன் சில நபர்களுடன் வந்து அடக்கம்செய்யக்கூடாது என்று பிரச்சனை செய்தார். நீங்கள் அடக்கம் செய்யும் இடம் என்னுடைய இடத்திற்கு முன்புறமாக உள்ளது. எனவே அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லி தேவிடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகாளல் பேசினார். பின்னர் துலுக்க பயலே உன்னை வெட்டிவிடுவேன் என்று சொன்னார். பின்னர் இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> – இல்லை

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.*

K KAVITHA

Digitally signed by K KAVITHA
Date: 2024.08.07 18:11:05 +0530

Chief Judicial Magistrate,
Theni.